தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஒ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 392/மா/2025
நாள் 05.10.2026

G. தேவா, சென்னை–600 026. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெரு நகர சென்னை மாநகராட்சி.
(2) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 100, வார்டு எண் 130,
கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை–600 026. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 026, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, பிளாசா மேனர், ஃபிளாட் C.50, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 08.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2025 அன்று பெறப்பட்டு 392/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 026, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, பிளாசா மேனர், ஃபிளாட் C.50, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவர் 08.10.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். வார்டு–130, மண்டலம் 10, கதவு எண் 100, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை 600 026, என்கின்ற முகவரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி கட்டிடம், பெருநகர சென்னை மாநகராட்சியிடம் பெற்ற வரைபட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வந்தது.

இது தொடர்பாக கடந்த 24.5.2025 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் 4 தகவல்கள் கேட்டு விண்ணப்பித்து இருந்தேன். அதில் கதவு எண் 100, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை 600 026 என்கின்ற முகவரியில் கட்டப்பட்டு வரும் கட்டிடம் விதிமுறைபடிதான் கட்டப்பட்டு வருகிறதா என்றும் அதற்குண்டான தகவல்கள் வழங்கும்படி கேட்டிருந்தேன். ஆனால் மண்டலம்–10ன் பொது தகவல் அலுவலர் 4 மாதங்கள் கடந்தும் இன்று வரை தகவல் வழங்கவில்லை.

23.07.2025 அன்று மேற்கண்ட முகவரியில் உள்ள விதிமீறல் கட்டித்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி, 1) முதல்வரின் முகவரித்துறை 2) துறை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, 3) உறுப்பினர் செயலர், CMDA, 4)ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, 5) துணை ஆணையர் (RDC)ஆகியோருக்கு புகார் மனு விரைவு தபாலில் அனுப்பினேன். அதன் பின்பும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ன் பொது அதிகார அமைப்பில் உள்ளவர்கள் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை.

12.06.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10ன் மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களுக்கு மேற்கண்ட முகவரியில் விதி மீறி கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கம்படி புகார் மனு விரைவு தபாலில் அனுப்பினேன். அதற்கும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

04.08.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பினேன். அதில் மேற்கண்ட முகவரியில் விதி மீறி கட்டப்பட்டு வரும் அடுக்கு மாடி கட்டிடத்தின் மீது, மாதந்தோறும் விதிமீறல் கட்டிடங்களை கண்காணிப்பதற்கான உயர்மட்ட குழு கூடும் போது எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டிடத்தை Lock and Seal செய்து இடித்து அப்புறப்படுத்துமாறு எனது புகார் மனுவில் வேண்டி இருந்தேன். அப்படியும் விதிமீறல் கட்டிடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ன் மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர்– I ஆகியோர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

15.09.2025 அன்று விழிப்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு புகார் மனு அனுப்பினேன். அதில் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ன் பொது அதிகார அமைப்பில் உள்ளவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைக்க வேண்டும் என்று வேண்டி இருந்தேன். அப்படியும் விதிமீறல் அடுக்குமாடி கட்டிடத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர் மற்றும் செயற் பொறியாளர் ஆகியோர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சட்ட விரோத அல்லது அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை ஊக்குவிக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் ஏற்கெனவே தெரிவித்து உள்ளது. ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முன்பாகவே சட்டப்படி உரிய அனுமதியை பெற வேண்டும். அனுமதி வழங்கிய அதிகாரிகள், முறையாக கட்டுமானம் நடக்கிறதா ? என ஆய்வு நடத்த வேண்டும். ஏதேனும் விதிமீறல் இருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டம் 1971ன் பிரிவு 54, விதி மீறல் கட்டுமானங்களின் அனுமதியை ரத்து செய்ய அதிகாரம் வழங்குகிறது. அதே சட்டத்தின் பிரிவு 56, அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை இடிக்க அதிகாரம் அளிக்கிறது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ன் பொது அதிகார அமைப்பில் உள்ளவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருகின்றனர்.

இறுதியாக, தலைவர், உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவருக்கு இந்த மனுவை விண்ணப்பிக்கிறேன். தாங்கள் எனது மனு மீது விசாரணை நடத்தி விதிமீறி கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10ன், மண்டல அலுவலர், செயற்பொறியாளர்–I, உதவி செயற் பொறியாளர் (Unit 29) மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 24.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு–130, மண்டலம் 10, கதவு எண் 100, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை 600 026, என்கின்ற முகவரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி கட்டிடம், பெருநகர சென்னை மாநகராட்சியிடம் பெற்ற வரைபட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வந்தது.
>
> இது தொடர்பாக கடந்த 24.5.2025 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கேட்டு விண்ணப்பித்து இருந்தேன். ஆனால் மண்டலம்–10ன் பொது தகவல் அலுவலர் 4 மாதங்கள் கடந்தும் இன்று வரை தகவல் வழங்கவில்லை. மேலும் 23.07.2025ல் நாளிட்ட மனுவினை முதல்வரின் முகவரி, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, Vigillance அலுவலர் ஆகியோருக்கு மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
>
> எனவே மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது ஏற்கனவே உச்ச நீதி மன்றம் தெரிவித்த ஆணைக்கு இணங்க உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

5. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> "மனுதாரர் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வடபழனி, கங்கையம்மன் கோவில் தெரு, கதவு எண்.100ல் கட்டப்பட்ட கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டது கண்டறிப்பட்டு தமிழ் நாடு நகர் மற்றம் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56, மற்றும் 57ன் கீழ் தாக்கீது 24.08.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது. இத்தாக்கீதின் கால அவகாசம் முடிந்தபின் மேற்கண்ட விதி மீறல் கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

6. இரண்டாம் எதிர்மனுதாரர் 28.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு–130, மண்டலம் 10, கதவு எண் 100, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி, சென்னை 600 026 என்கிற முகவரியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி கட்டிடம், பெருநகர சென்னை மாநகராட்சியிடம் பெற்ற வரைபட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டு வந்தது என்பதும், இது தொடர்பாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல்கள் கேட்டு மனுதாரர் விண்ணப்பித்து இருந்தும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–10ன் பொது தகவல் அலுவலர் இன்று வரை தகவல் வழங்கவில்லை என்பதும், மேலும் முதல்வரின் முகவரி, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, Vigillance அலுவலர் ஆகியோருக்கும் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், எனவே மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது ஏற்கனவே உச்ச நீதி மன்றம் தெரிவித்த ஆணைக்கு இணங்க உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வடபழனி, கங்கையம்மன் கோவில் தெரு, கதவு எண்.100ல் கட்டப்பட்ட இரண்டாம் எதிர்மனுதாரரின் கட்டிடத்தின் மீதான கள ஆய்வில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டது என்பது கண்டறிப்பட்டதால், தமிழ் நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56, மற்றும் 57ன் கீழ் தாக்கீது 24.08.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதும், இத்தாக்கீதின் கால அவகாசம் முடிந்தபின் மேற்கண்ட விதி மீறல் கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வடபழனி, கங்கையம்மன் கோவில் தெரு, கதவு எண்.100ல் கட்டப்பட்ட இரண்டாம் எதிர்மனுதாரரின் கட்டிடத்தின் மீதான கள ஆய்வில் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டது என்பது கண்டறிப்பட்டதால், தமிழ் நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, மற்றும் 57ன் கீழ் தாக்கீது 24.08.2026 அன்று வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இத்தாக்கீதின் கால அவகாசம் முடிந்தபின் மேற்கண்ட விதி மீறல் கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்று முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். மனுதாரர் 2025 ஆம் ஆண்டு மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் தொடர்பாக மனு அளித்தும் நடவடிக்கை எடுக்காமல், இம்முறைமன்ற நடுவம் 28.08.2026 அன்று விசாரணை மேற்கொள்ள அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர், மேற்கண்ட கட்டிடத்திற்கு மிகுந்த காலதாமதத்திற்கு பின்னர் 24.08.2026 அன்று தாக்கீது வழங்கியுள்ளது கண்டிக்கதக்கதாகும். இருப்பினும் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971 மற்றும் கட்டிட திட்ட அனுமதியினை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து, மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர

சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. திரு. G. தேவா
கதவு எண் 1, பிளாசா மேனர் ஃபிளாட் C.50,
கருமாரி அம்மன் கோயில் தெரு,
வடபழனி,
சென்னை–600 026.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.64, N.S.K. சாலை,
சென்னை 600 024.

(4) கட்டிட உரிமையாளர்,
கதவு எண்100, வார்டு எண் 130,
கங்கையம்மன் கோயில் தெரு,
வடபழனி,
சென்னை–600 026.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

6/10/26
செயலாளர்.